ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி

## பெரியாழ்வார் திருமொழி 1-1
### வண்ண மாடங்கள்
(கண்ணன் திருவவதாரச் சிறப்பு)

13 * வண்ண மாடங்கள் சூழ் * திருக்கோட்டியூர் *
கண்ணன் கேசவன் * நம்பி பிறந்தினில் **
எண்ணெய் சுண்ணம் * எதிரெதிர் தூவிடக் *
கண்ணன் முற்றம் * கலந்தளராயிற்றே (1)

14 ஓடுவார் விழுவார் * உகந்தாலிப்பார் *
நாடுவார் நம்பிரான் * எங்குத்தான் என்பார் **
பாடுவார்களும் * பல்பறை கொட்ட நின்று *
ஆடுவார்களும் * ஆயிற்று ஆய்ப்பாடியே (2)

15 பேணிச் சீருடைப் * பிள்ளை பிறந்தினில் *
காணத்தாம் புகுவார் * புக்குப் போதுவார் **
ஆணொப்பார் * இவன் நேரில்லை காண் * திரு
வோணத்தான் * உலகாளும் என்பார்களே (3)

16 உறியை முற்றத்து * உருட்டி நின்றாடுவார் *
நறுநெய் பால்தயிர் * நன்றாகத் தூவுவார் **
செறிமென் கூந்தல் * அவிழத் திளைத்து * எங்கும்
அறிவழிந்தனர் * ஆய்ப்பாடி ஆயரே (4)

17 கொண்டதாளுறி * கோலக் கொடுமழு *
தண்டினர் * பறியோலைச் சயனத்தர் **
விண்ட முல்லை * அரும்பன்ன பல்லினர் *
அண்டர் மிண்டிப் * புகுந்து நெய்யாடினார் (5)

18 கையும் காலும் நிமிர்த்துக் * கடார நீர் *
பையவாட்டிப் * பசுஞ்சிறு மஞ்சளால் **
ஐய நாவழித்தாளுக்கு * அங்காந்திட *
வையமேழும் கண்டாள் * பிள்ளை வாயுளே (6)

19 வாயுள் வையகம் * கண்ட மடநல்லார் *
ஆயர் புத்திரன் அல்லன் * அருந்தெய்வம் **

பாயசீருடைப் * பண்புடைப் பாலகன் *
மாயன் என்று * மகிழ்ந்தனர் மாதரே (7)

20 பத்து நாளும் கடந்த * இரண்டா நாள் *
எத்திசையும் * சயமரம் கோடித்து **
மத்த மாமலை * தாங்கிய மைந்தனை *
உத்தானம் செய்து * உகந்தனர் ஆயரே (8)

21 கிடக்கில் தொட்டில் * கிழிய உதைத்திடும் *
எடுத்துக் கொள்ளில் * மருங்கை இறுத்திடும் **
ஒடுக்கிப் புல்கில் * உதரத்தே பாய்ந்திடும் *
மிடுக்கிலாமையால் * நான் மெலிந்தேன் நங்காய் (9)

22 ***** செந்நெலார் வயல் சூழ் * திருக்கோட்டியூர் *
மன்னு நாரணன் * நம்பி பிறந்தமை **
மின்னு நூல் * விட்டுசித்தன் விரித்த * இப்
பன்னு பாடல் வல்லார்க்கு * இல்லை பாவமே (10)